# 5 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளுக்கு தடுப்பூசி



## சிறார்களில் கோவிட் - 19 ஆல் ஏற்படக் கூடிய ஆபத்துகள்



ரொறொன்ரோ நகரில் 2021 செப்டம்பர் நவம்பர் மாதங்களுக்கிடையில் கோவிட் - 19 நோய் தொற்றின் வீதம் ஏனைய வயதினரை விட 4இலிருந்து 13 வயது வரையுள்ளவர்களில் அதிகரித்துக் காணப்பட்டது.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஆட்களுக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று ஏற்படும் ஆபத்து மிக அதிகமாக இருக்கிறது.



கோவிட் - 19 தொற்று ஏற்பட்ட சிறார்களுக்கு நோய்குரிய அறிகுறிகள் ஏற்படாதிருந்தாலும் அவர்கள் அந்நோயைப் பரப்பக் கூடியவர்களாக இருப்பார்கள்.

கோவிட் நோய்த் தொற்று சிறார்களுக்கு அரிதான ஆனால் ஆபத்தான உடல் நலக் கேடுகளை ஏற்படுத்தலாம். அவையாவன:

- இதயத் தசை அழற்சி, இதய வெளியுறை அழற்சி (இதயத்தில் ஏற்படும் அழற்சி)
- பல உடற்கூறுகளில் ஏற்படும் அழற்சி (MIS-C). இது கோவிட் - 19 நோய் ஏற்பட்டு நான்கு கிழமைகளில் ஏற்படும் ஆபத்தான அழற்சி நிலையாகும்.

**குழந்தைகளுக்குள் லாங் கோவிட் எனப்படும் ஒரு நிலையை உருவாக்கலாம், அங்கு கோவிட்-19 நோயைப் பெற்ற பிறகு அவர்களுக்கு பின்வரும் அறிகுறிகள் இருக்கும்**

| | | |
|---|---|---|
| **மூச்சுத் திணறல்** | **கடுமையான சோர்வு** | **கவனம் செலுத்துவதில் சிரமம்** |

**ஆதாரம்:** Toronto Public Health

COUNCIL OF AGENCIES SERVING SOUTH ASIANS

SOUTH ASIAN VACCINE ENGAGEMENT COLLABORATIVE